# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C – 132/2016**

**position of Witness for Prosecution : P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணம்மா | Caste | : |
| Father/Husband Name | : குருசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( All accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 15.04.2026.**

முதல்விசாரணை

நான் உத்தமபுரத்தில் வசித்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு மாலை 5.30 மணியளவில் நான் மற்றும் சாட்சிகள் செல்லமுத்து, நாகஜோதி ஆகியோர்கள் எனது வீட்டில் இருந்தோம். அப்போது எதிரிகள் அனைவரும் எனது வீட்டிற்கு அத்துமீறி உள்ளே நுழைந்து எனது வீட்டில் இருந்த பாத்திரம் மற்றும் மற்ற சாமான்களை தூக்கி வெளியே போட்டார்கள். பின்னர் எதிரி பிரியா மற்றும் செல்வாக்கியம் ஆகியோர் எனது மூடியை பிடித்து இழுத்து வெளியே போட்டு என்னை அடித்தார்கள். எதிரி செல்வாக்கியம் எனது மகள் நாகஜோதியை பார்த்து தேவடியா என்று அசிங்கமான பேசி செருப்பால் எனது மகளை அடித்தார். சின்னன் என்பவர் சாட்சி செல்லமுத்தை தரையில் தள்ளி நீ உயிரோடு இருந்தால் தான் சொத்தில் பங்கு கேட்பாய் என்று கூறி கழுத்தை நெறித்தார்க. நாங்கள் பயந்து ஓடினோம் எதிரிகள் கம்பியை எடுத்துக்கொண்டு எங்களை விரட்டினார்கள். இதுசம்பந்தமாக

நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கைரேகை என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.17 16:02:57 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C – 132/2016**

**position of Witness for Prosecution : P.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்லமுத்து | Caste | : | |
| Father/Husband Name | : | குருசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 15.04.2026.**

முதல்விசாரணை

நான் உத்தமபுரத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து பிரச்சனை இருந்தது. கடந்த 27.06.2015ம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் நானும் எனது அம்மா அ.சா.1ம் எனது அக்கா நாகஜோதியும் எங்கள் வீட்டில் இருந்த போது. அப்போது எதிரிகள் அனைவரும் எனது வீட்டிற்கு அத்துமீறி உள்ளே நுழைந்து எனது வீட்டில் இருந்த பாத்திரம் மற்றும் மற்ற சாமான்களை தூக்கி வெளியே போட்டார்கள். பின்னர் எதிரி பிரியா மற்றும் செல்வாக்கியம் ஆகியோர் எனது அம்மாவின் மூடியை பிடித்து இழுத்து வெளியே போட்டு அவரை அடித்தார்கள். எதிரி செல்வாக்கியம் எனது அக்கா நாகஜோதியை பார்த்து தேவடியா என்று அசிங்கமான பேசி செருப்பால் எனது அக்காவை அடித்தார். எதிரி சின்னன் என்பவர் என்னை தரையில் தள்ளி நீ உயிரோடு இருந்தால் தான் சொத்தில் பங்கு கேட்பாய் என்று கூறி கழுத்தை நெறித்தார். நாங்கள் பயந்து ஓடினோம்

எதிரிகள் கம்பியை எடுத்துக்கொண்டு எங்களை விரட்டினார்கள். இதுசம்பந்தமாக எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.17 16:03:03 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C – 132/2016**

**position of Witness for Prosecution : P.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நாகஜோதி | Caste | : | |
| Father/Husband Name | : | அய்யனார் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All accused present)**

**Solemnly affirmed in accordace with the provision of Act X of 1969 of the day of 15.04.2026.**

முதல்விசாரணை

நான் உத்தமபுரத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.2 எனது தம்பியாவார் எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து பிரச்சனை இருந்தது. கடந்த 27.06.2015ம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் நானும் எனது அம்மா அ.சா.1ம் எனது தம்பி ஆகியோர் எங்கள் வீட்டில் இருந்த போது. அப்போது எதிரிகள் அனைவரும் எனது வீட்டிற்கு அத்துமீறி உள்ளே நுழைந்து எதிரி பிரியா எனது அம்மாவின் மூடியை பிடித்து இழுத்து ஏண்டி தேவடியா உனக்கு ஏண்ணடி சொத்து என்று சொல்லி வெளியே போட்டு அவரை அடித்தார்கள். வீட்டில் இருந்த பாத்திரங்கள் சாமான்களை அடித்து நொறுக்கினார்கள். எதிரி செல்வாக்கியம் என்னை முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள், தேவடியா என்று அசிங்கமான பேசினார்கள். எதிரி சின்னன் என்பவர் எனது தம்பி அ.சா.2ன்னை தரையில் தள்ளி நீ உயிரோடு இருந்தால் தான் சொத்தில் பங்கு கேட்பாய் என்று கூறி கழுத்தை நெறித்தார். நாங்கள்

பயந்து ஓடினோம் எதிரிகள் கம்பி, விளக்கமாற்றை எடுத்துக்கொண்டு எங்களை விரட்டினார்கள். அருகில் உள்ளவர்கள் விலகிவிட்டார்கள். இதுசம்பந்தமாக எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**

SATHIA NARAYANAN Digitally signed by SATHIA NARAYANAN Date: 2026.04.17 16:03:10 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C – 132/2016**

**position of Witness for Prosecution : P.W.4**

| | | | |
|---|---|---|---|
| Name | : கருப்பசாமி | Caste | : |
| Father/Husband Name | : சின்னச்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( All accused present)**

**Solemnly affirmed in accordace with the provision of Act X of 1969 of the day of 15.04.2026.**

முதல்விசாரணை

நான் தொட்டப்பநாயக்கனூரில் வசித்து வருகிறேன். நான் உத்தமபுரத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு சென்ட்ரிங் வேலைக்காக சென்றிருந்தேன். புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சண்டை நடந்தது. நாங்கள் சென்று விலகிவிட்டோம். யார் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 27.06.2015ம் தேதி மாலை நான் சிமெண்ட் தெருவில் நின்று கொண்டிருந்த போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 வீட்டிற்குள் நுழைந்து பாத்திரங்கள் மற்றும் சாமான்களை தூக்கி வெளியே எறிந்தார்கள் என்றும், மேலும் கம்பு, கம்பி, விளக்குமாறு ஆகியவற்றை கொண்டு விரட்டிவிரட்டி அடித்து கும்பியை பிடித்து கீழே இழுத்து போட்டு உங்களை உயிரோடு விட்டால் தானே சொத்து

கேட்பீர்கள் என்று சொல்லி அடித்தார்கள் என்றும் அப்போது நான் மற்றும் மற்ற சாட்சிகள் சண்டையை விலகிவிட்ட போது எதிரிகள் அனைவரும் கொலை மிரட்டல் விடுத்து சொன்றார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.17 16:03:16 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C – 132/2016**

**position of Witness for Prosecution : P.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வம் | Caste | : | |
| Father/Husband Name | : | சின்னச்சாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All accused present)**

**Solemnly affirmed in accordace with the provision of Act X of 1969 of the day of 15.04.2026.**

முதல்விசாரணை

நான் தொட்டப்பநாயக்கனூரில் வசித்து வருகிறேன். நான் உத்தமபுரத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு சென்ட்ரிங் வேலைக்காக சென்றிருந்தேன். வேலை முடித்துவிட்டு டீக்கடையில் டீ குடித்து கொண்டிருந்தோம். இரண்டு தரப்பினர்கள் சண்டை போட்டு கொண்டார்கள். நாங்கள் சென்று விலகிவிட்டோம். யார் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 27.06.2015ம் தேதி மாலை நான் சிமெண்ட் தெருவில் நின்று கொண்டிருந்த போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 வீட்டிற்குள் நுழைந்து பாத்திரங்கள் மற்றும் சாமான்களை தூக்கி வெளியே எறிந்தார்கள் என்றும், மேலும் கம்பு, கம்பி, விளக்குமாறு

ஆகியவற்றை கொண்டு விரட்டிவிரட்டி அடித்து  கும்பியை பிடித்து கீழே இழுத்து  போட்டு உங்களை உயிரோடு விட்டால் தானே சொத்து கேட்பீர்கள்  என்று சொல்லி அடித்தார்கள் என்றும் அப்போது நான் மற்றும் மற்ற சாட்சிகள் சண்டையை விலகிவிட்ட போது எதிரிகள் அனைவரும் கொலை மிரட்டல் விடுத்து சொன்றார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு  தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.17 16:03:23 +0530